IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 23/2016

Deposition of witness for prosecution : PW12

Defense :

Name : திரு.சௌந்தரராஜன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2023

முதல் விசாரணை

**1 ம் எதிரி இறப்பு. 2 முதல் 5 , 7 முதல் 11 எதிரிகள் ஆஜர். 6ம் எதிரி ஆஜரில்லை கு.வி.மு.ச. 317ன்கீழ் மனு தாக்கல்செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

1. நான் 2014ம் ஆண்டில் ஆரணி நகர காவல் நிலையத்தில் உதவிஆய்வாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றேன். 23.03.2014 தேதி இரவு 11.30 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது ஆரணி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஆரணி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த தனசேகரின த/பெ கோவிந்தன் என்பவரை பார்த்தேன். உள்நோயாளியாக இருந்த தனசேகரன் கொடுத்த புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் ஏற்கெனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. புகாரை பதிவு செய்து நிலையம் திரும்பி 24.03.2014 ம் தேதி க அதிகாலை 1.30 மணிக்கு புகார் வாக்குமூலத்தின்அடிப்படையில் ஆரணி நகர காவல்நிலைய குற்ற எண்.126/2014 சட்டப்பிரிவுகள் 147, 148, 324, 325, 506(2) 307 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் மேல் நடவடிக்கைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் தனசேகரின் கையெழுத்து பெறப்பட்ட பிறகு புகார் வாக்குமூல சங்கதிகள் சுருக்கி எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. புகாரில் கையெழுத்து வாங்கிய பிறகு தான் புகார் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் புகார்தாரரின் கையெழுத்து ஆரணி அரசு மருத்துவமனையில்தான் பெறப்பட்டது என்பது குறித்த வாசகம் எதுவும் காணப்படுகிறதா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே அ.சா.ஆ.1 புகாரை ஆரணி அரசு மருத்துவமனையில் வைத்து பதிவு செய்திருந்தால் அந்த புகாரில் அதற்குரிய வாசகத்தை எழுதி இருப்பேன் என்றும் அவ்வாறு எழுதவில்லை என்பதால் அ.சா.ஆ.1 புகார் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

2. காவல் நிலையத்தில் நான் இருந்தபோது ஆரணி அரசு மருத்துவமனையிலிருந்து எனக்கு கிடைக்கப்பெற்றதாக சொல்லப்படும் தகவலானது எழுத்து மூலமான தகவலா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் மருத்துவ மனைக்கு சென்றபோது புகார்தாரர் பொது வார்டில் இருந்தார். எனக்கு மருத்துவமனையிலிருந்து உண்மையிலேயே தகவல் வந்திருந்தால் புகாருடன் அந்த தகவலை இணைத்து தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரிதான்.

3. நான் காவல் நிலையத்தில் இருந்தபோது எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து அதன் பிறகு எத்தனை மணிக்கு ஆரணி அரசு மருத்துமவனைக்கு சென்றேன் என்றால் தகவல் கிடைத்த நேரம் நினைவில்லை ஆனால் நான் மருத்துவமனைக்கு சென்றபோது நேரம் இரவு 11.30 மணி இருக்கும். மருத்துவமனைக்கு நான் மட்டும்தான் சென்றேன் என்னுடன் வேறுயாரும் வரவில்லை. எங்கள் காவல் நிலையத்திலிருந்து ஆரணி அரசு மருத்துவமனைக்கு 5 நிமிடங்களில் சென்று விடலாம் என்றால் சரிதான்.

4. அ.சா.ஆ.1 புகாரை நான் முக்கால் மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்தில் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் பதிவு செய்தவுடன் நான் காவல் நிலையத்திற்கு தான் சென்றேன். ஆனால் புகார் பதிவு செய்து 2 மணி நேரம் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. பொதுவாக மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்ற மறு தினம் தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்வோம் என்றும் இந்த வழக்கில் மட்டும் இரவு நேரத்திலேயே தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்து அதிகாலையிலேயே முதல் தகவல் அறிக்கையும் பதிவுசெய்தத்றகான காரணம் என்னவென்றால், மேல் அதிகாரி புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சொன்னதால் அவ்வாறு செய்யப்பட்டது.

6. இந்த வழக்கின் புகார்தாரர் இரவு 10.50 மணிக்குதான் மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்க்கப்பட்டார் என்றும் அவ்வாறு சேர்க்கப்பட்ட 40 நிமிடங்களுக்குள் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்று நான் மருத்துவமனைக்கு சென்று இரவு 11.30 மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதுஎன்றால் சரிதான்.

7. ஆரணி அரசு மருத்துவமனையில் பொதுவாக விபத்தில் காயம்பட்டுவரும் நபர்களை விசாரிப்பதற்கு அவுட் போஸ்ட் காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார் என்று சொன்னால் அந்தகால கட்டத்தில் அவ்வாறு யாரும் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது ஆய்வாளர் உடன் இல்லை. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது அனைத்தும் ஆய்வாளரின் உத்தரவின்பேரில் தான் செய்யப்பட்டது

என்றால் சரியல்ல. அ.சா.1 புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நானே வழக்கிற்காக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல.